RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 88 | ஏப்ரல்.6 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# மனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாள்: இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்.9ம் தேதி வெளியாகும்

சென்னை: ஏப்.6-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது. இதுவரை 3,430 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எடப்பாடியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, தருமபுரியில் சவுமியா அன்புமணி உள்ளிட்டோர் இன்று வேட்புமனு தாக்கல் செய்கின்றனர். மனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறுகிறது. இறுதி வேட்பாளர் பட்டியல் ஏப்.9ம் தேதி வெளியாகிறது.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரேகட்டமாக ஏப்.23ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு கடந்த மார்ச் 15ம் தேதி வெளியானது. இதையடுத்து, அன்றைய தினமே தமிழகம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தன. தலா 2,106 தேர்தல் பறக்கும் படைகள், நிலைக் கண்காணிப்பு குழுக்கள் 24 மணி நேரமும் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றன. ஆண்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 5.69 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்த நிலையில், அனைத்து தொகுதிகளிலும் கடந்த மார்ச் 30ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. முதல்வர் ஸ்டாலின், தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் முதல் நாளிலேயே வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்கள், சுயேச்சைகள் உட்பட முதல் நாளில் மொத்தம் 867 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மார்ச் 31 (மகாவீர் ஜெயந்தி), ஏப்.1 (வங்கி விடுமுறை), ஏப்.3 (புனித வெள்ளி), ஏப்.5 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 4 நாட்கள் பொது விடுமுறை என்பதால் மனு தாக்கல் நடைபெறவில்லை. அந்த வகையில், இதுவரை 3 நாட்கள் மட்டுமே வேட்புமனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுவரை 3,430 மனுக்கள் இதில் 2,731 ஆண்கள், 698 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் ஒருவர் என மொத்தம் 3,430 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 84 மனுக்கள், பர்கூர் தொகுதியில் 29 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. குறைந்தபட்சமாக மானாமதுரை, நிலக்கோட்டையில் தலா 5 மனுக்களும், காட்டுமன்னார்கோவில், திருவாரூர், பேராவூரணி, கந்தர்வகோட்டை ஆகிய தொகுதிகளில் தலா 6 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் இதுவரை 282 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக தியாகராய நகர்தொகுதியில் 28 மனுக்கள், குறைந்தபட்சமாக ஆயிரம் விளக்கு தொகுதியில் 7 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில், தேர்தல் அறிவிக்கையில் கூறியபடி அனைத்து

தொகுதிகளிலும் வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது. இன்று ஒரு நாள் மட்டுமே அவகாசம் இருப்பதால், தமிழகம் முழுவதும் அதிமுக, பாஜக வேட்பாளர்கள், கடைசி நேரத்தில் அறிவிக்கப்பட்ட மதுரை மேலூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதன் உள்ளிட்டோர் இன்று மனு தாக்கல் செய்கின்றனர்.

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, எடப்பாடி தொகுதியிலும், பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி, தருமபுரி தொகுதியிலும் மனு தாக்கல் செய்கின்றனர். இன்று மாலை 3 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்படும்.

நாளை மனுக்கள் பரிசீலனை: இதைத் தொடர்ந்து, நாளை காலை 11 மணிக்கு, அனைத்து தொகுதிகளிலும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தலைமையில் வேட்புமனுக்கள் பரிசீலனை நடைபெறும். ஏற்கப்பட்ட, தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் விவரம் நாளை மாலை வெளியாகும். வேட்புமனுக்களை திரும்பப்பெற ஏப்.9ம் தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அன்று இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டு, சுயேச்சை வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படும்.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் பெயர், சின்னங்களைப் பொருத்தும் பணிகள் ஏப்.10ம் தேதி முதல் தொடங்க உள்ளன. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக பூத் ஸ்லிப் வழங்கும் பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை அந்தந்த மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

10ம் தேதி முதல் பிரச்சாரம் மேலும் சூடுபிடிக்க உள்ளது. அந்தந்த தொகுதிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள செலவினப் பார்வையாளர்களும், வேட்பாளர்களின் செலவினங்களை தீவிரமாக கண்காணிக்க உள்ளனர். தேர்தல் விதிமீறல் தொடர்பாக 'சி விஜில்' செயலியில் தெரிவிக்குமாறும், வேட்பாளர்கள் மீதான குற்ற வழக்குகள் மற்றும் கல்வித் தகுதி தொடர்பாக இசிஐ நெட் போர்ட்டலில் தெரிந்துகொள்ளுமாறும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பிரச்சாரம் ஏப்.21ம் தேதிமாலை 6 மணியுடன் நிறைவடைகிறது. அது முதல் தேர்தல் நாளான ஏப்.23 மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடியும் வரையிலான 48 மணி நேரம் அமைதி காலமாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த கால கட்டத்தில் பிரச்சாரம் மேற்கொள்ளவும், தொலைக்காட்சிகளை வைத்து காட்சிப்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. வாக்குப்பதிவுக்காக 75,032 வாக்குச்சாவடி மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை மாவட்டதேர்தல் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். வாக்குஎண்ணும் மையங்களை அமைக்கும் பணியும் நடந்து வருகிறது.

தேர்தல் நாளில் பொது விடுமுறை அறிவித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தினக்கூலி, ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து விதமானதொழிலாளர்கள், பணியாளர்களுக்கும் அன்று ஊதியத்துடன் விடுப்பு அளிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

# புதுச்சேரியில் இருநாட்களில் பிரச்சாரம் ஓய்கிறது

## இன்று அமித் ஷா, ராகுல், ஸ்டாலின் பிரச்சாரம்

புதுச்சேரி: ஏப்.6-

புதுச்சேரியில் இரு நாட்களில் பிரச்சாரம் ஓயவுள்ள நிலையில் நாளை அமித்ஷா, ராகுல். ஸ்டாலின், சீமான் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.



புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்ரல் 9ம் தேதி நடக்கிறது. இரு நாட்களில் அங்கு பிரச்சாரம் ஓய்கிறது. கடைசி இரு நாட்களில் முக்கியத் தலைவர்கள் புதுச்சேரியில் பிரச்சாரத்துக்கு குவிகின்றனர்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நாளை தனிவிமானத்தில் கொச்சியில் இருந்து சென்னை வந்து அங்கிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு புதுச்சேரி வருகிறார். தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மண்ணாடிப்பட்டு திருக்கனூரில் பிரச்சாரக் கூட்டத்தில் மாலை பங்கேற்கிறார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நாளை டெல்லியிலிருந்து சென்னை வந்து அங்கிருந்து விமானம் மூலம் புதுச்சேரிக்கு வருகிறார். ஈசிஆரில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் பகல் 11 மணியளவில் பங்கேற்கிறார். அதேபோல் திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் புதுச்சேரி வருகிறார்.

அவர் நாளை மாலை தட்டாஞ்சாவடி ஒழுங்குமுறை விற்பனை கூட மைதானத்தில் மாலை நடக்கும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். அத்துடன் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து சீமானம் பிரச்சாரம் செய்கிறார். பிரச்சார இறுதி நாளில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் நட்டா, திருமாவளவன் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்யவுள்ளனர்.

# "முதல்வர் ஸ்டாலினுக்கு ஆட்சி நடத்த தெரியவில்லை" : அன்புமணி குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.6-

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி இடம்பெற்றுள்ள அமமுக சார்பில் சைதாப்பேட்டை தொகுதியில் ஜி.செந்தமிழன், அதிமுக சார்பில் தி.நகர் தொகுதியில் சத்யா, அதிமுக சார்பில் விருகம் பாக்கம் தொகுதியில் விருகை வி.என்.ரவி ஆகியோர் போட்டியிடுகின்றனர். இவர்களை ஆதரித்து பாமக தலைவர் அன்புமணி பிரச்சாரம் செய்தார்.



அப்போது அவர் பேசியதாவது: பெரியார், அண்ணா, கருணாநிதியிடம் இருந்த சமூக நீதி, முதல்வர் ஸ்டாலினிடம் இல்லை. தி.நகர் மேம்பாலத்துக்கு திமுகவின் மாவட்ட செயலாளர் அன்பழன் பெயரை வைத்துள்ளனர். அவர் என்ன மகாத்மா காந்தியை விடவும் நாட்டுக்காக உழைத்தவரா, தியாகியா ?

மின் கட்டண உயர்வு: திமுக ஆட்சி செய்த கடந்த 5 ஆண்டுகளில் 4 முறை மின் கட்டணம் உயர்ந்துள்ளது ஏற்கெனவே இருந்த மின் கட்டணத்தை விட 56 சதவீத மின் கட்டணம் அதிகப்படுத்தியுள்ளனர். மின் கட்டண உயர்வால் தமிழகத்தில் எத்தனையோ தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் லட்சக்கணக்கான இளைஞர்கள்ளனர். எவ்வாறு ஆட்சி நடத்துவது என்று ஸ்டாலினுக்கு வேலைவாய்ப்பை இழந்துள் தெரியவில்லை.

ஆசிரியர்கள், சத்துணவு ஊழியர்கள், தூய்மைப் பணியாளர்கள். கிராம அலுவலர்கள் போராட்டம் நடக்கிறது. அவர்களை ஸ்டாலின் ஏமாற்றி விட்டதால், அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தற்போது அனைவரும் ஸ்டாலினுக்கு பாடம் புகட்டுவார்கள். மூன்று பெண் குழந்தைகளை பெற்ற தந்தையாக சொல்கிறேன், இப்படிப்பட்ட ஒரு சூழலில் தமிழகம் இருந்தது கிடையாது. திமுக ஆட்சியில் வாழ தகுதியற்ற மாநிலமாக தமிழகம் மாறிக்கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் தினமும் பாலியல் வன்கொடுமை நடக்கிறது. திமுக அரசு, படிப்பதற்கு வழிவகையை செய்யாமல் குடிப்பதற்கு வழிவகை செய்கிறது. பள்ளியில் படிப்பதற்கு ஒரு ஆசிரியர். ஆனால் டாஸ்மாக்கில் குடிப்பதற்கு ஐந்து ஊழியர்கள். இதுதான் திமுக, அமெரிக்காவில் விற்பனை செய்யப்படும் அனைத்து போதை பொருட்களும் தமிழகத்தின் அனைத்து வீதிகளிலும் கிடைக்கிறது.

தமிழகத்தில் மது, போதைப் பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்தினால் பெண்களுக்கான பாதுகாப்பும், சட்டம் ஒழுங்கும் நன்றாக இருக்கும். ஆனால், திமுகவின் தேர்தல் அறிக்கையில் படிப்படியாக மது விலக்கு குறித்து ஒரு வார்த்தை கூட இல்லை. அதிமுகவின் தேர்தல் வாக்குறுதியில் படிப்படியாக மதுவிலக்கு கொண்டு வரப்படும். தமிழகத்தில் போதை பொருட் களை ஒழிப்பதற்கு தனி பிரிவு உருவாக்கப்படும் என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி வாக்குறுதி கொடுத்துள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## காரனோடை ஸ்ரீ மஹாலட்சுமி சமேத பிரசன்ன ராஜகோபால சுவாமி ஆலயத்தில் திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி

மாதவரம், ஏப்.6-

மாதவரம் தொகுதி சோழவரம் கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ மஹாலட்சுமி சமேத பிரசன்ன ராஜகோபால சுவாமி ஆலயத்தில் பௌர்ணமி பங்குனி உத்திரம் முன்னிட்டு திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி ஆலய நிர்வாகிகள் தனசேகரன், செயலாளர் லோகநாதன், பொருலாளர் எத்திராஜ் மற்றும் ஸ்ரீ சீனிவாச பெருமால் சுவாமி பக்தஜன அறக்கட்டளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மூலவர்கள் மற்றும் உற்சவருக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் தாய்மார்கள் சீர்வரிசைகள் கொண்டுவரப்பட்டு கணபதி ஹோமத்துடன் மேளதாளத்துடன் மூலமந்திரங்கள் முழங்க உற்சவர்கள் அருள்மிகு ஸ்ரீ மஹாலட்சுமி சமேத பிரசன்ன ராஜகோபால சுவாமிக்கு திருக்கல்யாண வைபவம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 ஐ முன்னிட்டு 109 கூடலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்படும் வாக்கு தகவல்கள் அடங்கிய சீட்டுக்களை வாக்காளர்களுக்கு விநியோகம் செய்யப்படுவது குறித்து 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி' தேர்தல் நடத்தம் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன் அவர்கள் கூடலூர் மார்ளிங் எஸ்டார் மேல்நிலைப்பள்ளியில் வாக்குசாவடி நிலை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, தேர்தல் பணியில் ஈடுபடும் நுண் பார்வையாளர்களுக்கான இரண்டாம் கட்ட சீறற்றமயமாக்கல் (RANDOMIZATION) பணிகள் உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி பொது பார்வையாளர் எஸ். ஹரீஷ், அவர்கள் தலைமையில், நடைபெற்றது.



■ கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் அசோக் குமார் நேற்று கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர், திருமதி .சத்தியபாமா அவர்களின் அறிமுக கூட்டம்* மற்றும் *செயல்வீரர்கள் கூட்டம்

திருப்பூர், ஏப்.6-

திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, மூலனூர் வடக்கு தெற்கு ஒன்றியங்கள்; மூலனூர் கன்னிவாடி பேரூராட்சிகள் சார்பில்*

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் தாராபுரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர், திருமதி .சத்தியபாமா அவர்களின் அறிமுக கூட்டம்* மற்றும் *செயல்வீரர்கள் கூட்டம்* ஆனது,



திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்*, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர், *மாண்புமிகு சி.மகேந்திரன் M.A.,MLA.* அவர்கள் தலைமையில்,

கழக அம்மா பேரவை துணை செயலாளர்*, தாராபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் *திரு. முத்து வெங்கடேஷ்வரன்* அவர்கள் முன்னிலையில்,

04/04/2026 சனிக்கிழமை, மூலனூர் கொங்கு மஹால்* இல் நடைபெற்றது.

தொண்டர்கள் எழுச்சியோடும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் நமது வெற்றி வேட்பாளர் அவர்களை வெற்றி பெற வைப்போம் என்று சூளுரைத்தனர்.*

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் திரு ஜிஜி.காமராஜ், பொருளாளர் திரு சின்னப்பன் (எ) பழனிச்சாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் மூலனூர் தெற்கு திரு ராஜரத்தினம், மூலனூர் வடக்கு திரு செல்வகுமார், தாராபுரம் மேற்கு திரு பாலகுமாரன், தாராபுரம் தெற்கு திரு ரமேஷ், தாராபுரம் கிழக்கு திரு செல்வகுமார், குண்டடம் மேற்கு திரு செந்தில்குமார், குண்டடம் கிழக்கு திரு சோமசுந்தரம், தாராபுரம் நகர கழக செயலாளர் திரு ராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர்கள் மூலனூர் திரு வெற்றிவேல், கன்னிவாடி திரு.லட்சுமனசாமி, சார்பு அணி மாவட்ட செயலாளர்கள் இலக்கிய அணி திரு பாலசுப்பிரமணி, அம்மா பேரவை திரு மோகன்ராஜ், மகளிரணி திருமதி ரேவதி குமார், அமைப்புசாரா ஓட்டுநர் அணி திரு மகேஷ்குமார், இளைஞரணி திரு ஆதித்யன், சார்பணி மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



## பர்கூரில் அதிமுக நிர்வாகிகள் திமுக வேட்பாளர் மதியழகன் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, ஏப்.6-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் ஒன்றியத்தில் அ.தி.மு.க நிர்வாகிகள் மஜித்கொல்லப்பள்ளி ஊராட்சி அ.தி.மு.க ஊராட்சி செயலாளர் வெங்கடேசன், கிளை செயலாளர் சிவா, ஐகொந்தம் கொத்தப்பள்ளி ஊராட்சி அ.தி.மு.க கிளை செயலாளர்கள் இந்தர்சிங் (எ) பகவான் சிங், ஜாகீர் உசேன் (எ) சாண் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட அதிமுகவினர், பர்கூர் திமுக வேட்பாளர் மதியழகன் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். ஒன்றிய செயலாளர் காந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், தங்கமணி, வேலு உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



■ கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் கிராமத்தில் கிருஷ்ணகிரி அதிமுக வேட்பாளர் கே. அசோக் குமார் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன் தங்கள் தோட்டத்தில் விளைந்த வாழைத்தாரை கொடுத்து வரவேற்றார். மேற்கு ஒன்றிய செயலாளர் பையூர் ரவி,அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் கேசவன், முன்னாள் கவுன்சிலர் கணேசன் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அன்பரசு, நாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## அனைத்து தரப்பு மக்களின் ஆதரவுடன் மீண்டும் வெற்றி" - மதியழகன் எம்எல்ஏ நம்பிக்கை

கிருஷ்ணகிரி, ஏப்.06-

அனைத்து தரப்பு மக்களின் பேராதரவுடன் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மீண்டும் வெற்றி பெறுவேன் என திமுக வேட்பாளர் மதியழகன் எம்எல்ஏ உறுதியாக தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தொகுதிக்கு உட்பட்ட புளியம்பட்டி, குண்டானூர், கள்ளியூர், பாப்பாரப்பட்டி, சாமாண்டப்பட்டி, வாடமங்கலம் கூட்ரோடு, மிண்டிகிரி, பெரிய ஆலரள்ளி, சின்ன ஆலரள்ளி, சந்தம்பட்டி, வலசகவுண்டனூர் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் அவர் தீவிர பிரசாரம் மேற்கொண்டார்.



அப்போது பேசிய அவர், மு.க. ஸ்டாலின் தலைமையிலான கடந்த 5 ஆண்டுகளின் ஆட்சியில் மகளிர் விடியல் பயணம், உரிமைத்தொகை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் போன்ற பல மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மகளிர் உரிமைத்தொகை மேலும் உயர்த்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், "நாங்கள் செய்த சாதனைகளை அடிப்படையாக கொண்டு மக்களிடம் வாக்கு கேட்கிறோம். ஆனால் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுக ஆட்சி மக்களிடம் நேரடியாக ஆதரவு பெறாமல் நடந்தது. மக்களின் நலனில் அக்கறை இல்லாத அதிமுக, பாரதிய ஜனதா கட்சி அரசின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது" என விமர்சித்தார்.

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் யார் வந்தால் நமக்கு திட்டங்கள் கிடைக்கும் என்பதை சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும், "உதயசூரியன் சின்னத்தில் எனக்கு வாக்களித்து பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அனைத்து தரப்பு மக்களின் ஆதரவுடன் மீண்டும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவேன்" என நம்பிக்கை தெரிவித்தார்.

பிரசாரத்தின் போது, தேங்காய் உரிக்கும் தொழிலாளர்களை நேரில் சந்தித்து அவர்களுடன் உரையாடி வாக்குகள் சேகரித்தார். மேலும், பல இடங்களில் பெண்கள் ஆரத்தி எடுத்து அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் தட்டரள்ளி நாகராஜ், தொகுதி பொறுப்பாளர் பார் இளங்கோவன், ஒன்றிய பொறுப்பாளர் இளையராஜா, தொண்டரணி துணை அமைப்பாளர் சங்கர், தேமுதிக மாவட்ட செயலாளர் சின்னராஜ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையம் மாவட்ட ஆட்சியர் ஆய்வு - தேர்தல் பணிகள் தீவிரம்

கிருஷ்ணகிரி, ஏப்.06-


தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேர்தல் பணிகள் வேகமெடுத்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, அரசு பல் தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சித் தலைவருமான தினேஷ் குமார் நேரில் ஆய்வு செய்தார்.



இந்த மையத்தில் கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை, வேப்பனஹள்ளி, ஓசூர் மற்றும் தளி ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ( ணி கூஷி வி ) பாதுகாப்பாக வைக்கப்படவுள்ள வைப்பறைகள் தனித்தனியாக அமைக்கப் படுகின்றன. மேலும், வாக்குப்பதிவின்போது பயன்படுத்தப்படும் எழுது பொருட்கள், கவர்கள் உள்ளிட்ட தளவாடங்களுக்கான சேமிப்பு அறைகளும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு வருகின்றன.

வாக்கு எண்ணும் மையத்திற்குள் வருகை தரும் முகவர்கள் மற்றும் அலுவலர்கள் சீராகச் செல்லும் வகையில் தனித்தனி தடுப்புகள் அமைப்பது குறித்து ஆட்சித் தலைவர் ஆலோசனை வழங்கினார். தபால் வாக்குகளுக்கான தனி அறை, குடிநீர், கழிப்பறை மற்றும் மின்சார வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் ஆய்வு செய்து, அவற்றை விரைவாக முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும், வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு மற்றும் ஒழுங்கை உறுதி செய்ய தேவையான தடுப்பு அமைப்புப் பணிகளை விரைந்து நிறைவு செய்ய பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக் குறள், ஓசூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ சார் ஆட்சியர் ஆக்ருத்தி சேத்தி, ஊத்தங்கரை தொகுதி அலுவலர் சிவகுமார், பர்கூர் தொகுதி அலுவலர் அபிநயா, வேப்பனஹள்ளி தொகுதி அலுவலர் கீதா ராணி ஆகியோர் உடன் இருந்தனர். உதவி தேர்தல் அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித்துறை பொறியாளர்களும் இதில் கலந்து கொண்டனர்.இந்த ஆய்வு மூலம், தேர்தல் பணிகள் திட்டமிட்ட முறையில் முன்னேறி வருவதை ஆட்சித் தலைவர் உறுதி செய்ததுடன், வாக்கு எண்ணும் நாளில் எந்தவித குறையும் இல்லாமல் செயல்பட தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## கே.பி.முனுசாமி முன்னிலையில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி வேட்பாளர் அ.தி.மு.க.வில் இணைந்தார்

கிருஷ்ணகிரி, ஏப்.06-

கிருஷ்ணகிரி மாவட்ட தமிழக வாழ்வுரிமை மக்கட்சியின் பொறுப்பாளர் தி.க.குமார். இவர் வேப்பனப்பள்ளி சட்டசபை தொகுதியில் அக்கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப் பட்டார். இவர் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் பரபரப்பாக தனது தேர்தல் பணியில் இறங்கினார்.

இந்த நிலையில், வேட்பாளர் தி.க.குமார் திடீரென அக்கட்சியில் இருந்து விலக முடிவு செய்தார். தொடர்ந்து அவர், நேற்று வேப்பனப்பள்ளி சட்டசபை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளரும், அக்கட்சியின் துணை பொதுச்செயலாளருமான கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. முன்னிலையில் அ.தி.மு.க.வில் இணைந்தார். அவருடன் ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோர் இணைந்தனர்.

அவருக்கு கட்சி துண்டு அணிவித்து கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. வரவேற்றார். மேலும் வருகிற சட்டசபை தேர்தலில் வேப்பனப்பள்ளி தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் தன்னை வெற்றி பெற செய்ய இளைஞர்கள் பாடுபட வேண்டும் என்று அவர் கேட்டு கொண்டார்.




■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம், ஏர்ரஹள்ளி ஊராட்சி போத்தாபுரத்தில், அதிமுக வேட்பாளர் அசோக்குமார் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். ஒன்றிய செயலாளர்பையூர் ரவி, நகர செயலாளர் விமல்,மாவட்ட நிர்வாகிகள் ஜெயக்குமார், KP. மோகன், பால்வளம் குப்புசாமி, ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், முன்னாள் கவுன்சிலர் கணேசன்,நாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் அதிமுக நிர்வாகிகள் திரளாக பங்கேற்று ஆதரவு தெரிவித்தனர்.




## பக்தர்களுக்கு இலவச மூலிகை குடிநீர் வழங்கல்

மாதவரம், ஏப்.6-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி பாடியநல்லூர் ஊராட்சி பர்மா நகர் அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் அங்காளஈஸ்வரி ஆலய 61ஆம் ஆண்டு பங்குனி உத்திரம் தீமிதி திருவிழாவை முன்னிட்டு 2ம் ஆண்டு மொண்டியம்மன் நகர் சபரிமலை ஸ்ரீதர்ம சாஸ்தா பக்த ஜனா சபா மற்றும் டிரஸ்ட் சார்பில் பக்தர்ளுக்கு இலவச மூலிகை குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தலைமையில் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பக்தர்கள் மற்றும் சுற்றுவட்டார கிராமபொதுமக்கள் உடல் ஆரோக்கியமாக இருக்க உணவே மருந்து போல் சுத்தமான மூலிகை குடிநீரை இலவசமாக வழங்கினர்.




## சோழவரம் ஒன்றியத்தில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கிருத்திகாஏழுமலை தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.6-

தமிழ்நாடு வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலையொட்டி திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கிருத்திகா ஏழுமலை செங்குன்றம் பஜாரில் உள்ள காமராஜர் சிலை அருகே இருந்து செங்குன்றம், பாடியநல்லூர், மொண்டியம்மன் நகர், காந்திநகர், அம்பேத்கர்நகர், அலமாதி, சிவந்தி ஆதித்தன் நகர், சோலைம்மன் நகர், ஆட்டந்தாங்கல், விஜயநல்லூர் ஆகிய சோழவரம் ஒன்றியத்தில் உள்ள வாக்காளர்களை பரப்புரை வாகனத்தில் சென்று விவசாயி சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் இரா.ஏழுமலை உள்ளிட்ட பொறுப்பாளர்கள் ஜெயபிரகாஷ், இராவணன் இளையராஜா, சக்திவேல் உட்பட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



### செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 15வது வார்டில்

## தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் தீவிர வாக்கு வேட்டை

மாதவரம், ஏப்.6-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூர் கழக செயலாளர் டி.ரமேஷ் அறிவுத்தலின்படி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் அதிமுக ரஜினிகாந்த், ஜீவானந்தம், செந்தில்குமார், பாஜக விமல்குமார்,

பாமக தங்கவேல் நாயக்கர், துளசிங்கம், குணசேகரன் ஆகியோர் செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்கு உட்பட்ட 15வது வார்டு 300வது பூத்தில் உள்ள வாக்காளர்களை வீடு வீடாக சென்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி அதிமுக வேட்பாளர் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வி.மூர்த்தி க்கு இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம், சின்ன கம்மியம்பட்டு பெத்த வேப்பம்பட்டு கலந்திரா பெரிய கம்மியம்பட்டு சின்ன மோட்டூர் கூத்தாண்ட குப்பம் ஆகிய ஊராட்சிகளில் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் உமா கண் ரங்கம் தலைமையில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள் நிர்வாகிகளை சந்தித்து ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து வாக்கு சேகரித்தார் உடன் ஒன்றிய நிர்வாகிகள் ஊராட்சி கழக செயலாளர் கிளை கழக செயலாளர் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்



■ இன்று சிவகங்கை சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் .றிஸி. செந்தில்நாதன் காளையார்கோவில் வடக்கு ஒன்றியம் கொட்டகுடி ஊராட்சி ஆளவிலாம்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயி தோப்பில் கடலை செடிகளுக்கு கலை எடுத்து விவசாயிகளிடம் இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தார்.

## பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி தலைமையில் பல்லாவரம் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் அனகை டி.முருகேசன் அவர்களுக்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்





பம்மல் ஏப்ரல். 06- செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் அனகை டி.முருகேசன் அவர்களுக்கு பம்மல் தெற்கு பகுதி செயலாளர் 1வது மண்டலம் குழு தலைவர் வே.கருணாநிதி தலைமையில்

பம்மல் பகுதியில் உள்ள பொதுநல சங்கங்கள், வியாபார சங்கங்கள், கிறிஸ்துவ தேவாலயங்கள், மசூதிகள், இந்து கோயில்கள், உள்ள முக்கிய நிர்வாகிகளை சந்தித்து வாக்கு சேகரித்தார் உடன் காஞ்சி வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பிகேஜ. சத்திய பிரபு, வட்டக் கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், வி.எஸ்.ஜெகநாதன், மு.இன்பசேகர், என்.காந்தி, எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர், தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், பம்மல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள், 10 பாக பொறுப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பகுதி செயற்குழு உறுப்பினர்கள் மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக நிலை முகவர்கள் பாக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் பாக இளைஞரணி அமைப்பாளர்கள் பாக மகளிர் அணி அமைப்பாளர்கள். அனைவரும் வட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தேர்தல் பறக்கும் படை சோதனை

## ஆவணம் இல்லாத 9.5 கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள் பறிமுதல்



இராமநாதபுரம், ஏப்.6- இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி தேர்தல் சோதனை சாவடியில் ராஜேஸ்வரன் தலைமையிலான தேர்தல் பறக்கும் படை நடத்திய சோதனையில் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் பகுதியைச் சேர்ந்த ராஜா பவர் 18 பெட்டிகளில் தங்கம், வைரம், வெள்ளி பொருட்களை கொண்டு வந்ததால் அதை பறிமுதல் செய்து முதுகுளத்தூர் தாலுகா அலுவலகத்தில் ஒப்படைத்தனர் அதன் மதிப்பு ரூபாய். 9,47,22,868. (மதிப்பிலான) நகைகள் பறிமுதல் செய்யப்பட்ட நகைகளைதுணை வட்டாட்சியர் ராஜ் குமார் முன்னிலையில் ஒப்படைத்தனர்.



■ "20,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம்" என தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் பொன் பாலகணபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடியின் நல்லாட்சி, கூட்டணி பலம் காரணமாக சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மீண்டும் தங்களுக்கே வரும் என்றார். தற்போதைய எம்எல்ஏ மீது மக்கள் அதிருப்தி உள்ளதாகவும், வெற்றி பெற்றால் குடிநீர், சுகாதாரம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பிரச்சனைகள் தீர்க்கப்படும் என்றும் கூறினார்.

## காளையார்கோவிலில் இயேசு ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழா நடைபெற்றது





காளையார் கோவில் ஏப்.06- சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் புனித அருளானந்தர் ஆலயம் ஆனந்தா அரங்கத்தில் இயேசு ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. நள்ளிரவில் நடைபெற்ற பாஸ்க்கு உயிர்ப்பு பெருவிழா ஆலய பங்குத்தந்தை அருள்தந்தை சேசு உதவிப் பங்குத்தந்தை அருள்தந்தை நிக்கோலாஸ் அருள்தந்தை பிரான்சிஸ் அருள் தந்தை செழியன் ஆகியோர் இணைந்து கூட்டுப் பாடற் திருப்பலியினை நிறைவேற்றினர். காளையார்கோவில் சுற்று வட்டாரத்திலுள்ள கிளைப்பங்குகளான சிகூரணி வலையம் பட்டி புலிக்கண்மாய் பருத்திக்கண்மாய் உசிலங்கண்மாய் தோரலங்கண்மாய் மந்திக்கண்மாய் ஆண்டூரணி ஆகியவற்றிலிருந்து 2500 க்கு மேற்பட்ட இறைமக்கள் உயிர்ப்பு பெருவிழாவில் கலந்துகொண்டனர். நள்ளிரவு 12 மணியளவில் இயேசு ஆண்டவரின் உயிர்ப்பு நிகழ்வு வண்ண விளக்குகள் ஜொலிக்க இறைமக்கள் அனைவரும் எரியும் மெழுகுதிரி ஏந்தி உயிர்த்த இயேசுவின் ஆசீர் பெற்றனர். கடந்து செல்லுதல் என்ற பொருள்படும் இந்த பாஸ்கா விழாவானது நான்கு முக்கிய பகுதிகளாக திருஒளி வழிபாடு இறைவார்த்தை வழிபாடு திருமுழுக்கு வழிபாடு நற்கருணை வழிபாடு என பிரிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. திருப்பலியை புனித வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர்கள் சிறப்பித்தனர். புனித வார நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு உழைத்த அனைவருக்கும் பங்குத்தந்தை நன்றி கூறினார்.



## செங்கம் பகுதியில் அதிமுக வேட்பாளர் T.S.வேலு பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பு

திருவண்ணாமலை, ஏப்.6- திருவண்ணாமலை மாவட்டம்செங்கம் தோக்கவாடி துக்காம்பேட்டை திருவள்ளூர் நகர் மில்லத் நகர் ஆகிய பகுதிகளில்அதிமுக அறிவித்த வாக்குறுதிகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி செங்கம் தனித் தொகுதி வேட்பாளர் T.S.வேலுஅவர்கள்இரட்டை இலை சின்னத்திற்கு பொதுமக்களிடம் ாக்கு சேகரித்தஅப்பொழுது பொதுமக்கள் அவர்களுக்குஆரத்தி எடுத்து உற்சாகமாக வரவேற்றனர்இதில் கூட்டணி கட்சிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்




■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (05.04.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த இரண்டு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து, செல்பி புகைப்படம் எடுத்து வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்றார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் தங்கராஜ் ஆகியோர் உடனிருந்தனர்

## பழனியில் ஸ்ரீ நாராயண குருவின் ஐந்தாம் ஆண்டு குடும்ப விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது




பழனிஏப். 6- திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், கேரளாவின் சமூக சீர்திருத்தவாதியும், ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகத் திகழ்ந்தவருமான ஸ்ரீ நாராயண குருவின் ஐந்தாம் ஆண்டு குடும்ப விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் பழனி மட்டுமல்லாது கேரளா, பொள்ளாச்சி கோயம்புத்தூர் போன்ற பல்வேறு நகரங்களில் இருந்து நாராயண குருவின் அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இவர் ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு கடவுள் மனிதனுக்கு' என்ற உன்னதத் தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியவர் ஸ்ரீ நாராயண குரு. மனித நேயமே மதங்களுக்கு அப்பாற்பட்ட உயரிய பண்பு என்பதையும், 'கல்வியால் சுதந்திரம் பெறுங்கள்' என்ற அறிவுரையையும் மக்களுக்கு வழங்கிய அவரது சிந்தனைகள் இந்த விழாவில் நினைவு கூரப்பட்டன மற்றும் கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவிகளுக்குக் கேடயங்களும், கல்வி ஊக்கத்தொகைப் பரிசுகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து விழாவில் பங்கேற்ற முக்கியப் பிரமுகர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கோவில் இணை ஆணையர் மாரிமுத்து, .லயன்ஸ் கிளப் மாவட்ட கவர்னர் டாக்டர் ரவீந்திரன், லயன்ஸ் சுப்புராஜ், செயலாளர் உன்னிகிருஷ்ணன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்."


Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161